# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

## S.C. 56/2023

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் நாள் வியாழக்கிழமை PW2-இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

Deposition of LW2 Examined as PW2

| | | |
|---|---|---|
| Date | : | 21.12.2023 |
| Name | : | ஜான்பீட்டர்தேவராயர் |
| Husband Name/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Post | : | |
| Religion | : | |
| Age | : | |

A1 ,3 to A6 present. A7 absent. 317 petition filed and allowed.

<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>

நான் நல்லத்தூரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர்எதிரிகளை எனக்கு தெரியும். 17.02.2018 தேதி கொங்கானகரை சுமார் 3 ஏக்கர் நிலம் உள்ளது. அன்று அறுப்பு அறுப்பதற்காக ஏஜெண்ட் ரவிச்சந்திரன் அறுவடை இயந்திரம் கேட்டேன். அவர்கள் இயந்திரம் அனுப்பி இருந்தார்கள்.அப்போது உபயோகத்தில் இருக்கும்போது 15 நிமிடம் ரிப்பேர் ஆகிவிட்டது. அறுவடை முடிந்த பிறகு 1-3/4 மணி நேரத்திற்கு என்னிடம் பில்லில் கையெழுத்து போடுமாறு கேட்டார்கள் அதற்கு நான் 1-1/2 மணி நேரம் தான் ஒடியது,. அதற்கு மட்டும்தான் நான் கையெழுத்து போடுவேன் என்று சொன்னேன். ஏஜெண்ட் குச்சிக்காரி மகனே தேவடியா மகனே என்று வித்தியசாமான ஆபாசமான வார்த்தைகளால் திட்டினார். ஏஜெண்ட்

ரவிச்சந்திரன், செந்தமிழ்வாணன், செந்ததமிழ்செல்வன்ஆகியோர் என்னிடம் சண்டை செய்தார்கள். வந்தவுடனே தகாத வார்த்தை கூறி என்னையும் என் தம்பியையும் பெல்டால் அடித்தார்கள். அதன் பிறகு ஏஜெண்ட ரவிச்சநதிரன் செந்தமிழ் செல்வன் செந்தமிழ்வாணன் ஆகிய என்னையும் என் அண்ணன் தேவராயனையும் பெல்டால் அடித்தார்கள். கட்டையால் இடது தோள்பட்டையிலும் இடது முன்காலிலும் அடித்தார்கள். நான் ஓடிபோய் ஒரு புதரில் பதுங்கி கொண்டேன். பெத்தப்பெருமாள என்பவர் எங்கள் ஊர்பிரசிடண்ட் அவரிடம் எங்கள் அண்ணை அழைத்துச்செல்லும்மாறு போனில்சொன்னேன். அவர் வந்து நான் பார்த்துக்கொள்கிறேன் என்று சொன்னார் என் அண்ணனை கால்வாய் வைத்திருந்தார்கள் சொன்னார்கள் அங்கிருந்து காவல் நிநலையத்திற்கு அழைத்துச்சென்றார் அங்கிருந்து மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு போலிசார் சென்றார்கள்அங்கு பார்க்கமுடியாது என்று சொன்னதால் கும்பகோணம் அன்பு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். என்னிடம் காண்ப்பிக்கப்படும் உருட்டை கட்டையா என்று தெரியாது சம்பவத்தின்போது ஆளுக்கொரு கட்டை எடுத்து வந்தார்கள். என்னை எதிர்த்து பேசினால் கொலை செய்துவிடுவோம்என்று சொல்லிதான் கூட்டிச்சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை இல்லை.**